بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 17/01/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**உஸைர் பின் ரிஸ்ஸாமை நோக்கி அனுப்பப்பட்ட அப்துல்லாஹ் பின் ரவாஹாவின் போர்ப்படை மற்றும் அம்ர் பின் உமய்யா ஸமரீயின் போர்ப்படை தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

இன்று எடுத்துரைக்கப்படவிருக்கும் போர்ப்படைகளில் ஒன்று உஸைர் பின் ரிஸ்ஸாமை நோக்கி அனுப்பப்பட்ட அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களின் போர்ப்படையாகும். இந்தப் போர்ப்படை ஷவ்வால் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு உஸைர் அல்லது யுஸைர் பின் ரிஸ்ஸாமை நோக்கி ஃகைபருக்கு அனுப்பப்பட்டது. இதன் விபரத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அபூ ராஃபி சலாம் பின் அபில் ஹுகைக் கொல்லப்பட்டபோது, யூதர்கள் உஸைர் பின் ரிஸ்ஸாமைத் தங்கள் அமீராக நியமித்தார்கள். அவன் யூதர்கள் முன் நின்று இவ்வாறு உரையாற்றினான்: 'என் நண்பர்களில் எவரும் செய்திடாததை நான் செய்வேன். நான் ஃகத்ஃபான் கோத்திரத்திடம் செல்கிறேன். அவர்களை ஒன்று திரட்டுகிறேன். நாம் முஹம்மத் {(ஸல்)} அவர்களை நோக்கி சென்று அவர்களது வீட்டிற்குள் நுழைந்து விடுவோம். ஒருவர் தன் எதிரியின் வீட்டுக்கு வந்து தாக்குதல் தொடுக்கும்போது, அவர் தனது நோக்கத்தில் ஓரளவுக்கு வெற்றி பெற்றே தீருகிறார்.' அவன் ஃகத்ஃபான் கோத்திரத்தையும், பிற கோத்திரங்களையும் நோக்கி சென்று விட்டான். அவர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராகப் போர்புரிய ஒன்று திரட்ட ஆரம்பித்தான்.

இதன் விபரத்தில் ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: இந்த நிலைமைகள் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கிடைத்ததும், பெருமானார் (ஸல்) அவர்கள் உடனடியாக அப்துல்லாஹ் பின் ரவாஹா எனும் தம் அன்ஸாரி சஹாபி ஒருவரை மற்ற மூன்று சஹாபாவுடன் ஃகைபரை நோக்கி அனுப்பி வைத்தார்கள் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் சென்றார்கள். அவர்கள் இரகசியமாக எல்லா நிலைமைகளையும்

விபரங்களையும் அறிந்து கொண்டும், இந்த செய்திகள் சரியானவைதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டும் திரும்பி வந்து விட்டார்கள். அந்த நாள்களிலேயே ஃஹாரிஜா பின் ஹுஸைல் எனும் முஸ்லிம் அல்லாத ஒரு நபர் தற்செயலாக ஃஹைபரிலிருந்து மதீனாவுக்கு வந்தார். அவரும் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களை உண்மைப்படுத்தினார். இந்த உறுதிப்படுத்தலுக்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களது தலைமயில் சஹாபா பெருமக்கள் முப்பது பேரைக் கொண்ட ஒரு குழுவை ஃஹைபரை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

உஸைரை மதீனாவுக்கு வரவழைத்து, இந்தக் குழப்பத்தைத் தூண்டுவது நின்றுவிடும் வகையிலான, நாட்டில் அமைதி மற்றும் சமாதான சூழல் உருவாகிவிடும் வகையிலான ஓர் உடன்பாட்டை அவனுடன் செய்து கொள்ள வேண்டும் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோக்கமாக இருந்தது என்பது, ஃஹைபரில் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களுக்கும் உஸைர் பின் ரிஸ்ஸாமுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலிலிருந்து வெளிப்படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் உஸைரை ஃஹைபர் பகுதியின் அமீராக ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அளவுக்கு இந்த விருப்பத்தில் ஆயத்தமாக இருந்தார்கள்.

பதவிக்குப் பெரிதும் ஆசைப்பட்டு வந்த உஸைருக்கு, அல்லது அவனது மனதில் வேறு ஏதாவது எண்ணம் மறைவாக இருந்திருக்கலாம். அவனுக்கு இந்த முன்மொழிவு பிடித்து விட்டது. குறைந்தபட்சம், 'எனக்கு இந்த முன்மொழிவு பிடித்து விட்டது' என்று அவன் வெளிப்படுத்தவாவது செய்தான். ஆக, உஸைர் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களின் குழுவுடன் மதீனாவுக்கு செல்ல ஆயத்தமாகி விட்டான். அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களைப் போன்று அவன் தானும் யூதர்கள் முப்பது பேரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டான்.

இவ்விரு குழுக்களும் ஃஹைபரிலிருந்து புறப்பட்டு, ஃஹைபரிலிருந்து 6 மைல் தொலைவில் இருந்த கர்கரா எனும் இடத்தை அடைந்தன. அப்பொழுது உஸைரின் நிய்யத் மாறி விட்டது. அல்லது அவனது நிய்யத் ஏற்கனவே மோசமாகத்தான் இருந்தது என்றால், அது வெளிப்படுவதற்கான நேரம் வந்து விட்டது என்று புரிந்து கொள்ள வேண்டும். அந்த இடத்திலேயே, சரியாக வழியில், முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் வாள் வீசப்பட்டது. ஒரு வகையில், இரண்டு குழுக்களும் எண்ணிக்கையில் சரிசமமாக இருந்தன. யூதர்கள் ஏற்கனவே மனரீதியாக ஆயத்தமாக இருந்தார்கள். முஸ்லிம்கள் முற்றிலும் எண்ணமே கொள்ளாமல் இருந்தார்கள். ஆனால், இறைவன் எப்படி அருள் புரிந்தான் என்றால், முஸ்லிம்கள் சிலர் காயமடைந்தார்கள்தான்; எனினும், அவர்களில் எவருக்கும் உயிரழப்பு ஏற்படவில்லை. ஆனால்,

மறுபுறம் யூதர்கள் அனைவரும் தமது நம்பிக்கைதுரோகத்திற்கான பலனை சுவைத்தவாறு மண்ணில் கலந்து விட்டார்கள். சஹாபா பெருமக்களின் இந்தக் குழு மதீனாவுக்குத் திரும்பிவந்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நிலைமைகள் பற்றித் தெரிய வந்ததும், பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்கள் நலமுடன் தப்பித்துக் கொண்டதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். மேலும், 'இறைவன் உங்களை அந்த அநீதியிழைக்கும் குழுவிடமிருந்து காப்பாற்றியதற்காக நன்றி செலுத்துங்கள்' என்று கூறினார்கள்.

இந்த நிகழ்வு தொடர்பாக கிறிஸ்தவ வரலாற்றாசிரியர்கள் சிலர், 'ஒருவகையில், அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களின் குழு உஸைர் முதலியோரை, வழியில் சந்தர்ப்பம் பார்த்து கொன்று விடும் நிய்யத்தில்தான் ஃகைபரிலிருந்து வெளியே அழைத்துக் கொண்டு வந்தது' என்று ஆட்சேபனை செய்துள்ளார்கள். ஆனால், எடுத்துக் கூறப்பட்டது போன்று, முஸ்லிம்கள் இந்த எண்ணத்தில் அங்கு சென்றார்கள் என்பதற்கு வரலாற்றில் எந்தச் சான்றும் கிடைப்பதில்லை. மாறாக, ஆழ்ந்து கவனம் செலுத்தினால் மற்ற சான்றுகள் ஒருபுறமிருக்கட்டும், 'இறைவனின் எதிரியே! நம்பிக்கைத் துரோகம் செய்யப்பார்க்கிறாயா?' என்ற அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களின் இந்தச் சொற்கள் இருக்கின்றன. பிறகு, 'இறைவன் உங்களை அந்த அநீதியழைக்கும் குழுவிடமிருந்து காப்பாற்றியதற்கு நன்றி செலுத்துங்கள்' என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் இந்தச் சொற்கள் இருக்கின்றன. இவை மட்டுமே முஸ்லிம்களின் எண்ணம் முற்றிலும் தூயதாகவும் அமைதி நிறைந்ததாகவும் இருந்தது என்பதை நிரூபிக்கப் போதுமானவையாகும்.

பிறகு, அம்ர் பின் உமைய்யா ஸமரீயின் போர்ப்படையாகும். இது அபூ சுஃப்யானை நோக்கிச் சென்றது. இப்னு ஹிஷ்ஷாம், இப்னு கஸீர் மற்றும் தபரீ போன்றோர் இந்தப் போர்ப்படையை ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு தொடர்பாக ரஜீஃ சம்பவத்துக்குப் பிறகு எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால், இப்னு சஃது அவர்களும், ஸர்க்கானீ அவர்களும் இந்தப் போர்ப்படையை ஹிஜ்ரீ 6 ஆம் ஆண்டின் போர்ப்படைகளின் கீழ் எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களும் சீரத் காத்தமுன்னபிய்யீனில் இந்தப் போர்ப்படையை ஹிஜ்ரீ 6 ஆம் ஆண்டில் எடுத்துரைத்துள்ளார்கள்.

இந்தப் போர்ப்படையின் விபரம் பின்வருமாறு: அபூ சுஃப்யான் குறைஷிய மனிதர்கள் சிலரிடம், 'உங்களில் முஹம்மத் {(ஸல்)} அவர்களை அவர்கள் சந்தைகளில் சுற்றிவந்து கொண்டிருக்கும் போது தீடிரெனக் கொன்று விடுபவர் எவரும் இல்லையா?' எனக் கேட்டார். ஆக, அபூ சுஃப்யானிடம் அவர் வீட்டுக்கு காட்டரபிகளில் ஒரு மனிதர் வந்தார். அவர், 'நீ எனக்கு உதவி செய்தால், நான் அவர்கள் பக்கம் செல்வேன். எதுவரை என்றால்,

திடீரென்று முஹம்மத் {(ஸல்)} அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விடுகிறேன். என்னிடம் ஒரு கத்தி இருக்கிறது. அது கழுகின் இறக்கையைப் போன்றது. அதைக் கொண்டு நான் முஹம்மத் {(ஸல்)} அவர்கள் மீது தாக்குதல் தொடுப்பேன். பிறகு, நான் ஏதாவது ஒரு கூட்டத்துள் கலந்து விடுவேன். ஓடிச் சென்று அந்த சமுதாயத்தை விட்டு முன்னால் சென்று விடுவேன். ஏனென்றால், நான் வழிப்பாதையில் கைத்தேர்ந்தவன் ஆவேன்' என்று கூறினார். எனவே, அபூ சுஃப்யான் அவருக்கு ஒட்டகத்தையும் பயணத்துக்குத் தேவையானவற்றையும் கொடுத்தார். அந்த நபர் இரவில் புறப்பட்டார். மதீனா சென்றடைந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குறித்து விசாரிக்கத் துவங்கினார். எதுவரை என்றால், பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி அவருக்குக் கூறப்பட்டது. எனவே, அவர் தனது பயண விலங்கைக் கட்டி வைத்து விட்டு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நோக்கி வந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ அப்தில் அஷ்ஹலின் பள்ளிவாசலில் இருந்தார்கள்.

கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் அவரைப் பார்த்ததும், 'நிச்சயமாக இந்த மனிதனுக்கு ஏமாற்றும் எண்ணம் உள்ளது. அல்லாஹ் அவருக்கும் அவர் எண்ணத்துக்கும் நடுவில் இடைப்பட்டுள்ளான்' என்று கூறினார்கள். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கச் சென்றார். அப்பொழுது உஸைது பின் ஹுளைர் (ரலி) அவர்கள் அவரை அவரது போர்வையின் உட்புற முனை வழியாகப் பிடித்து இழுத்தார்கள். திடீரென்று அவர் கையில் இருந்து கத்தி விழுந்து விட்டது. அவர், 'என் இரத்தம் என் இரத்தம்' என்று கத்தினார். அதாவது, எனக்கு உயிர்ப்பிச்சை போடுங்கள் என்றார். ஹஸ்ரத் உஸைது அவர்கள் அவரை கழுத்தில் பிடித்தார்கள்; பிறகு, விட்டு விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், 'நீ யார் என்று எனக்கு உண்மையைக் கூறு' என்று கூறினார்கள். அதற்கு அவர், 'நான் உயிருக்கு உத்திரவாதம் வேண்டுகிறேன்' என்று கேட்டார். ஹுஸூர் (ஸல்) அவர்கள், 'சரி' என்று கூறினார்கள். அவர் தன் வேலையையும் அபூ சுஃப்யான் அவருக்காக நிர்ணயித்ததையும் கூறினார். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரை விட்டு விட்டார்கள். இந்தப் பரிவினால் அவர் முஸ்லிம் ஆகி விட்டார்.

அபூ சுஃப்யானின் இந்தக் கொலை சதித்திட்டம், மக்கத்தினரின் எண்ணங்களை, நிய்யதை அறிந்திருக்க வேண்டும் என்பதை முன்னரைவிட அதிகம் அவசியமாக்கி விட்டது. எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ (ரலி) அவர்கள் மற்றும் சல்மா பின் அஸ்லம் (ரலி) அவர்கள் ஆகிய தம் சஹாபா இருவரை மக்காவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ சுஃப்யானின்

இந்தக் கொலை சூழ்ச்சியையும் அவரது முந்தைய இரத்த வெறி நடவடிக்கைகளையும் பார்த்தவாறு, சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றால் போர்க்குணமிக்க, இஸ்லாத்தின் இந்த எதிரியை ஒழித்து விடுங்கள் என்று அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள்.

ஆனால், உமைய்யா அவர்களும் அவர்களின் தோழரும் மக்காவை அடைந்தபோது, குறைஷியர்கள் மிகவும் எச்சரிக்கையாகி விட்டார்கள். இந்த சஹாபா இருவரும் தமது உயிரைக் காப்பாற்றிக் கொண்டு மதீனாவின் பக்கம் திரும்பி வந்தார்கள். வழியில் அவர்கள் குறைஷியர்களின் ஒற்றர்கள் இருவரை சந்தித்தார்கள். அவர்களை குறைஷிய தலைவர்கள் முஸ்லிம்களின் நடவடிக்கை பற்றி தெரிந்து கொள்வதற்காகவும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நிலைமைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவும் அனுப்பியிருந்தார்கள். இந்தத் திட்டமும் குறைஷியர்களின் வேறு ஏதோ கொலை சதித்திட்டத்தின் முன்னோடியாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், இறையருள் ஏற்பட்டது. உமைய்யா மற்றும் சலமாவுக்கு இவர்களது ஒற்றறிதல் பற்றித் தெரிந்து விட்டது. அதனால் அவர்கள் அந்த ஒற்றர்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். ஆக, இந்த சண்டையில் ஒற்றன் ஒருவனோ கொல்லப்பட்டான். இரண்டாமவனை சிறைபிடித்து அவர்கள் தம்முடன் மதீனாவுக்குத் திருப்பி அழைத்து வந்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* மற்றவை இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் துஆக்கள் செய்யுமாறு வலியுறுத்தியவாறு கூறினார்கள்:* பாக்கிஸ்தானின் நிலைமைகளுக்காக நான் துஆவிற்காகக் கூறிக்கொண்டே இருக்கிறேன். இதில் சிலவேளை பயங்கரவாதம் மிகவும் அதிகமாக வந்து விடுகிறது. நிர்வாகமும் அரசாங்கமும்கூட பயங்கரவாதத்தை விரும்பும் மவ்லவிகளின் கைகளில் பொம்மைகளாகியிருப்பதாகத் தெரிகிறது. முன்னரோ பள்ளிவாசலின் மினாராவை இடித்துத் தள்ளி விட்டார்கள்; மிஹ்ராபை இடித்துத் தள்ளி விட்டார்கள் என்ற செய்திகள் வந்து கொண்டிருந்தன. அவர்களுக்கு இந்த ஆட்சேபனை இருந்தது. ஆனால், இப்பொழுது டஸ்கா எனும் இடத்தில் நேற்று அவர்கள் பாதை அமைக்கிறோம் என்ற சாக்கில், முதலில், 'இவ்வளவு இடத்தை நாங்கள் எடுத்துக் கொள்வோம்; அங்கு Bulldozer ஓட்டி இடத்தை காலி செய்வோம் என்று நோட்டீஸ் அனுப்பினார்கள். இதில் பள்ளிவாசலின் குளியலறை போன்றவற்றின் சிறு பகுதிகள் வந்தன. ஆனால், Bulldozer கொண்டு வந்தபோது, அவர்கள் மவ்லவிகள் கூறியதன்பேரில், முழு பள்ளிவாசலையும் இடித்துத் தள்ளி விட்டார்கள். ஷஹீதாக்கி விட்டார்கள்.

இது கட்டடப்பட்ட பழைய பள்ளிவாசலாகும். நாடுபிரிவினைக்கு முன்னர் கட்டடப்பட்டிருந்தது. ஹஸ்ரத் சௌத்ரீ ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் இதை கட்டியிருந்தார்கள் என்று நினைக்கிறேன். எவ்வாறு இருப்பினும், இவர்கள் இன்றைய காலத்தில் இப்பொழுது எந்தஅளவுக்கு மிகைத்து விட்டார்கள் என்றால், அல்லாஹ்வே இவர்களை விரைவாக பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக! இவர்களுடைய சூழ்ச்சியை இவர்கள் மீது திருப்பி விடுவானாக! எனவே அஹ்மதிகள், குறிப்பாக பாகிஸ்தானின் அஹ்மதிகள் மிகவும் அதிகமாக துஆக்கள் செய்ய வேண்டும். இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

இதே போன்று பாலஸ்தீனம் தொடர்பாகவும் செய்யப்படும் உடன்படிக்கை குறித்து, சிலசமயம் செய்யப்பட்டு விட்டது என்றும் சிலசமயம் செய்யப்படவில்லை என்றும் கூறுகிறார்கள். அல்லது உடன்படிக்கைக்குப் பிறகு மீண்டும் சம்பவங்கள் நடக்கின்றன. இந்த விஷயத்தில் மக்கள் சிலர் தேவையில்லாமல் மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், தஜ்ஜாலிய ஆற்றல்கள் மீது எந்த நம்பிக்கையும் வைக்க முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் சொல்வது ஒன்று; செய்வது ஒன்று. எனவே, இந்த அளவு நல்லெண்ணம் கொண்டு மெத்தனமாக இருந்து விடக்கூடாது. அவர்களுக்காக துஆக்களும் செய்ய வேண்டிய தேவையிருக்கிறது. முஸ்லிம்கள் அறிவுடைமையுடன் செயல்பட்டு தங்களுடைய உரிமைகளைப் பெறுவதன் பக்கம் முயற்சியும் செய்ய வேண்டும். அல்லாஹுத்தஆலா முஸ்லிம் சமுதாயத்திற்கு இதற்கான அறிவை வழங்குவானாக! (ஆமீன்).

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் (ரப்வாவின் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நாஸிர் தீவான்) ஷேக் முபாரக் அஹ்மத் சாஹிப் அவர்கள், கத்தாரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் முனீர் அதேல்பீ சாஹிப் அவர்கள் மற்றும் (ரப்வாவின் தஹ்ரீகே ஜதீதின் கணிணித் துறையின் இன்சார்ஜ்) மதிப்பிற்குரிய அப்துல் பாரீ தாரிக் சாஹிப் அவர்கள் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு இவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழவைப்பதாகவும் அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا

مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ

وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ

اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)